بسم الله الرحمن الرحيم نحمده ونصلّى على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 8

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

20 ரஜப் 1437 ஹிஜ்ரி கமரி 28 ஏப்ரல் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பிநஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

> இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருட்களும் சாந்தியும் அவருக்கு உண்டாவதாக) நபி எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட நபி ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறிய முடியாது. அவருடைய தூய குணயில்புகளின் தாக்கத்தை கணக்கிடுவது மனிதனின் வேலையன்று. அடையாளங்கண்டு கொள்ளப்பட வேண்டிய முறையில் அவரின் உயர் தகுதி அடையாளங் கண்டு கொள்ளப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே! உலகில் மறைந்த அந்த ஓரிறைக் கொள்கையை (தவ்ஹீதை) மீண்டும் இந்த உலகிற்கு கொண்டு வந்தவர் அவ்வீரர் ஒருவரே!

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இறைவன் சுயமே தேவைகளற்றவனாக இருப்பதன் காரணமாக அவன் தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான். இதைப் பற்றி அவன், (3:97) اِنَّ اللّٰهَ غَنِيٌّ عَنِ الْعٰلَمِيْنَ மற்றும் (29:70) وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا அதாவது, இறைவன் முழு உலகை விட்டும் தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான். நமது வழியில் முயற்சி செய்து நம்மைப் பெற்றுக் கொள்வதற்காக முயற்சியை அதன் எல்லை வரை கொண்டு செல்பவர்களாக நாம் நமது வழியைக் காட்டிக் கொடுப்பது நமது இயற்கைச் சட்டமாகும் என்று கூறுகின்றான். அவ்வகையில் இறைவனின் வழியில் எல்லாரையும் விட முதலாவதாக தியாகம் செய்பவர்கள் நபிமார்களாக இருக்கின்றனர். ஒவ்வொருவரும் தமக்கென்று முயற்சி செய்கின்றனர். மேலும், (மக்களாகிய) அவர்கள் உறங்குகின்றனர். (நபிமார்களாகிய) அவர்கள் அம்மக்களுக்காக விழித்திருக்கின்றனர். அம்மக்கள் சிரிக்கின்றனர். அவர்கள் அம்மக்களுக்காக அழுகின்றனர். உலகம் விடுதலை அடைவதற்காக ஒவ்வொரு துன்பத்தையும் தங்கள் மீது அவர்கள் வரழைத்துக் கொள்கின்றனர். இறைவன் தனது தோற்றத்தை வெளிப்படுத்துவதன் மூலமாக இறைவன் இருக்கின்றான் என்பதை மக்களுக்கு நிரூபித்துக் காட்டுவதற்காகவும் ஆயத்தமாக இருக்கின்ற உள்ளங்கள் மீது அவனது இருப்பும் அவனது ஏகத்துவமும் வெளிப்பட்டு அதன் மூலமாக அவர்கள் இரட்சிப்பைப் பெற வேண்டும் என்பதற்காகவும் இவற்றையெல்லாம் அந்த நபிமார்கள் செய்கின்றனர்.

எனவே, அவர்கள் தமது உயிரின் எதிரிகளிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்வதில் தாமே மரணித்து விடுகின்றனர். அவர்களது வேதனை அதன் இறுதி எல்லையை அடைந்து (படைப்பினங்களின் விடுதலைக்காக) அவர்களது வேதனை நிறைந்த பெருமூச்சுக்கள் வானத்தை சென்றடைகின்ற போது அந்த நேரத்தில் இறைவன் தனது முகத்தின் ஒளியைக் காட்டுகின்றான். வலுவான அடையாளங்கள் மூலமாக தனது இருப்பையும் தனது ஏகத்துவத்தையும் மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுகின்றான். எனவே, ஏகத்துவமும் இறைவன் வழங்கும் பொருட்களும் தூதரை பற்றிப்பிடிப்பதன் மூலமாகவே உலகிற்கு கிடைக்கின்றது. அது இல்லாமல் ஒருபோதும் அவை கிடைக்காது. இவ்விஷயத்தில் எல்லாரையும் விட மிக உயர்ந்த முன்மாதிரியை நமது நபி (ஸல்) அவர்கள் காட்டினார்கள். அன்னார் அசுத்தத்தில் அமர்ந்திருந்த ஒரு சமுதாயத்தை அசுத்தத்திலிருந்து அகற்றி மலர்கள் நிறைந்த தோட்டத்தில் அவர்களைக் கொண்டு சென்றார்கள். மேலும் ஆன்மீகப் பசியாலும் தாக்கத்தாலும் மரணிக்க இருந்த அம்மக்களுக்கு முன்னால் உயர்ந்த நிலையில் இருக்கும் ஆன்மீக உணவுகளையும் இனிப்பான பானத்தையும் அவர்கள் வைத்தார்கள். அன்னார் அவர்களை மிருகங்களின் நிலையில் இருந்து மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு சாதாரண மனிதனிலிருந்து அவர்களை நாகரீகமுள்ள மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு நாகரீகமுள்ள மனிதர்களிலிருந்து அவர்களை முழுமை பெற்ற மனிதர்களாக மாற்றினார்கள். மேலும் எந்த அளவு அவர்களுக்கு அடையாளங்களை வெளிப் -படுத்திக் காட்டினார்கள் என்றால் அவர்களுக்கு இறைவனை காட்டினார்கள். மேலும் அவர்களிடம் எத்தகைய மாற்றத்தை உருவாக்கினார்கள் என்றால், அம்மக்கள் மலக்குகளிடம் கை குலுக்கினர். இந்தத் தாக்கத்தை வேறு எந்தவொரு நபியும் தனது சமுதாயத்தில் ஏற்படுத்திக் காட்டவில்லை. ஏனென்றால், அவர்களின் நட்பில் இருந்தவர்கள் குறையுள்ளவர்களாகவே இருந்தனர். இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருட்களும் சாந்தியும் அவருக்கு இருப்பதாக) நபி எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட நபி ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறிய முடியாது. அவருடைய தூய குணயில்புகளின் தாக்கத்தைக் கணக்கிடுவது மனிதனின் வேலையன்று.☆ அடையாளங் கண்டு கொள்ளப்பட வேண்டிய முறையில் அவரின் உயர் தகுதி அடையாளங்கண்டு கொள்ளப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே! உலகில் மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் இந்த உலகிற்கு கொண்டு வந்தவர் அவ்வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற அனுதாப உணர்வில் அவரது உயிரே உருகி விட்டது. எனவே, அவரின் உள்ளத்தின் இரகசியத்தை அறிந்திருந்த

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*

☆ உலகம் முடிவுறப் போகின்றது. ஆனால், இந்த முழுமை பெற்ற நபியின் அருளின் கதிர்கள் இப்போது வரை முடிந்து விடவில்லை. இறைவனது வார்த்தைகளான திருக்குர்ஆன் தடையாக இல்லாமல் இருந்திருந்தால் இந்த ஒரு நபி தொடர்பாக மட்டும் அவர் இப்போது வரை தனது பூத உடலுடன் வானத்தில் உயிருடன் இருக்கின்றார் என்று நம்மால் கூற முடியும். ஏனென்றால், நாம் அவர் உயிர் வாழ்வதற்கான தெளிவான அடையாளத்தைப் பார்க்கின்றோம். அவரது மார்க்கம் உயிருடன் இருக்கின்றது. அவரைப் பின்பற்றுபவர் உயிர் பெற்று விடுகின்றார். அவர் மூலமாக உயிருள்ள இறைவன் கிடைத்து விடுகின்றான். இறைவன் அவரையும் அவரது மார்க்கத்தையும் அவரை நேசிப்பவரையும் நேசிக்கின்றான் என்பதை நாம் பார்த்து விட்டோம். உண்மையில் அவர் உயிருடன் இருக்கின்றார். மேலும் வானத்தில் எல்லாரையும் விட அவரது தகுதி உயர்ந்ததாக இருக்கின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால், அழிந்து போகக் கூடியவர் இந்த பூத உடலுடன் அவர் இல்லை. மாறாக, அவர் என்றும் அழியாத ஓர் ஒளிமிக்க உடலுடன் தனது வல்லமைமிக்க இறைவனின் அருகில் வானத்தில் இருக்கின்றார்.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மார்ச் 23 ஆம் தேதி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் மிக முக்கியமான ஒரு நாளாகும். அல்லாஹ் முஹம்மதிய்ய சமுதாயத்திடமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமும் செய்திருந்த வாக்குறுதி அந்நாளில் நிறைவேறியது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பும் நிறைவேறியது. மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலகட்டம் ஆரம்பமானது.

இன்றிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன் கடந்த அந்த நாளுக்கு ஒரு முக்கியத்தும் உள்ளது. அதனைக் கருத்தில் கொண்டவாறு ஜமாஅத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தினக் கூட்டம் நடத்தப்படுகின்றன. அதில் எங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் மற்றும் ஜமாஅத் உருவாக்கப்பட்ட விஷயம் மற்றும் அந்த நாளின் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டதோ அங்கு ஜமாஅத் உறுப்பினர்கள் நன்றியும் செலுத்தினார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஒப்புக் கொள்வதற்கும் அன்னாருக்கு ஸலாத்தை எட்ட வைப்பதற்கும் நமக்கு நற்பேறு வழங்கியுள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் அவர்களது வருகையின் நோக்கங்கள் பற்றி ஹுஸூர் எடுத்துக் கூறினார்கள். இவ்வகையில் ஜமாஅத் சகோதரர்கள் தமது பொறுப்புகளின் பக்கம் கவனம் செலுத்துமாறு வலியுறுத்திக் கூறினார்கள்.

மார்ச் 23 என்ற அடிப்படையில் சில மக்கள் ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துக்கள் கூறிக் கொண்டிருந்தனர். நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஒப்புக் கொண்டிருக்கின்றோம். அன்னாரை ஏற்றுக் கொண்டு நாங்கள் நல்வழி பெற்ற முஸ்லிம்களாக மாறி விட்டோம். மேலும் நாங்கள் மார்க்கத்தின் உதவிக்காக அதன் சிறப்புகளை பரப்புவதற்காக இந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தால் அது அவர்களுக்குரிய உரிமையாகும். அதில் எந்த தவறும் இல்லை. அதில் எவ்வித பித்அத்தும் இல்லை.

கிலஃபத்தின் பாதங்களுக்கு முன்னால் சென்று பாதங்களை வைத்து முன்னேறுவதற்கு முயலக் கூடாது. எவர் அவ்வாறு செய்தாலும் அவர் வீழ்ந்து விடுவார். இதை நினைவில் கொள்ளுங்கள். ஒற்றுமையாக இருங்கள். தனது விருப்பத்திற்குரிய விஷயத்தை ஜமாஅத் உறுப்பினர்கள் மீது திணிப்பதற்கும் அதன் படி செயல்பட வைப்பதற்கும் முயற்சி செய்யாதீர்கள்.

மதிப்பிற்குரிய மர்ஹூம் முஸ்லிஹுத்தீன் சஅதி சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய மஹ்மூதா சஅதி சாஹிபா, மதிப்பிற்குரிய மர்ஹூம் சிராகு தீன் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய நூருத்தீன் சிராகு சாஹிப் ஆகியோரது ஜனாஸா ஹாஸிர் தொழுகையையும், மதிப்பிற்குரிய அப்ல் பாரி சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய ஸய்யிதா முபாரக்கா பேகம் சாஹிபாவின் ஜனாஸா காயிப் தொழுகையையும் ஹுஸூர் அவர்கள் தொழ வைத்தார்கள். மர்ஹூமீன்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 25 மார்ச் 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு அமான் மாதம் 25 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ۔ إِيَّاكَ نَعْبُدُ

وَإِيَّاكَ نَسْتَعِينُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ۔

இரண்டு நாட்களுக்கு முன்பு மார்ச் 23 ஆம் தேதியாக இருந்தது. இந்த நாள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் மிக முக்கியமான ஒரு நாளாகும். அல்லாஹ் முஹம்மதிய்ய சமுதாயத்திடமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமும் செய்திருந்த வாக்குறுதி அந்நாளில் நிறைவேறியது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பும் நிறைவேறியது. மேலும் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலகட்டம் ஆரம்பமானது. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்திக்கான அறிவிப்பை செய்வதற்கு அந்நாளில் அல்லாஹ் அனுமதி நல்கினான். அன்னார் எங்கு இறைவனின் ஏகத்துவத்தை உலகத்தில் நிலைநாட்டுவதற்கு ஆதாரங்களை எடுத்து வைக்க வேண்டியதிருந்தோ அங்கு மற்ற மார்க்கங்களை விட இஸ்லாமிய மார்க்கத்தின் மேன்மையையும் முழுமையையும் நிரூபிக்க வேண்டியதும் அவசியமாக இருந்தது. மேலும், அல்லாஹ்வின் இறுதி நபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான அன்பினால் மக்களின் உள்ளத்தை நிரப்ப வேண்டியதும் இருந்தது.

ஆக, நாம் இன்று மிக நற்பேறு பெற்ற மக்களாவோம். ஏனென்றால் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றோம். மேலும் நான் கூறியது போன்று, இன்றிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன் கடந்த அந்த நாளுக்கு ஒரு முக்கியத்தும் உள்ளது. அதனைக் கருத்தில் கொண்டவாறு ஜமாஅத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தினக் கூட்டம் நடத்தப்படுகின்றன. அதில் எங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் மற்றும் ஜமாஅத் உருவாக்கப்பட்ட விஷயம் மற்றும் அந்த நாளின் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டதோ அங்கு ஜமாஅத் உறுப்பினர்கள் நன்றியும் செலுத்தினார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஒப்புக் கொள்வதற்கும் அன்னாருக்கு ஸலாத்தை எட்ட வைப்பதற்கும் நமக்கு நற்பேறு வழங்கியுள்ளான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஒப்புக் கொள்வது எங்கு மகிழ்ச்சி மற்றும் நன்றிக்கான தருணமாக இருக்கின்றதோ அங்கு நமது பொறுப்புகளும் அதிகரித்து விடுகின்றன என்று நாம் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும்.

எனவே, அந்த பொறுப்புகளை அடையாளம் காண்பதன் பக்கமும் அதனை செயல்படுத்துவதன் பக்கமும் கவனம் செலுத்துவது அவசியமாகும். நமது பொறுப்புகள் என்ன? நமது பொறுப்புகள் என்னவென்றால், எந்த பணிகளை செயல்படுத்தவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றினார்களோ அவற்றை முன்னெடுத்துச் செல்வதாகும். அப்போதுதான் எந்த மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு புதிய வானம் மற்றும் புதிய பூமியை படைக்கக்கூடிய மக்களாக தங்களை ஆக்கிக் கொண்டார்களோ அந்த மக்களை சார்ந்தவர்களாக நாம் ஆக முடியும். எனவே, இந்த பொறுப்புகளை புரிந்து கொள்வதற்கு நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அன்னாரின் வருகையின் நோக்கம் என்னவாக இருந்தது என்றும் நாம் பார்க்க வேண்டும். மேலும் நாம் அதனை எந்த அளவுக்கு புரிந்து வைத்திருக்கின்றோம்? மேலும், எந்த அளவிற்கு நாம் அதனை நம்மீது செயல்படுத்தி இருக்கின்றோம்? அதனை உலகில் பரப்புவதில் என்ன முக்கிய பங்கு ஆற்றியுள்ளோம்? அல்லது அதற்காக என்ன முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்? என்று நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: என்னை எந்த பணிக்காக இறைவன் அனுப்பியுள்ளானோ அந்த பணி இதுவாகும். உலகில் இறைவனுக்கு அவனது படைப்பினங்களுக்கும் இடையிலான தொடர்பில் என்ன மாசு ஏற்பட்டுள்ளதோ அதனை அகற்றி அன்பு மற்றும் தூய்மைக்கான தொடர்பை மீண்டும் நிலைநாட்டுவதாகும். மேலும் இரண்டாவது விஷயம் உண்மையினை வெளிப்படுத்தி மார்க்கப் போர்களை தடை செய்து சமாதானத்திற்கான அடித்தளத்தை அமைப்பதாகும். மேலும் உலகத்தின் கண்களிலிருந்து மறைந்து போன மார்க்க உண்மைகளை அவர்களுக்கு நான் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். நான்காவது விஷயம் என்னவென்றால், மன இச்சைகளின் இருளில் புதைந்து போன ஆன்மீகத்தை உயிர்ப்பித்து நான் மக்களுக்கு காட்டிக் கொடுக்க வேண்டும். அடுத்து இறைவனின் எந்த வல்லமைகள் மனிதனுள் நுழைந்து துஆவின் மூலம் வெளிப்படுமோ அதனை நான் சொல்லால் மட்டுமல்லாமல் செயலால் மற்றும் நிலையால் வெளிப்படுத்திக் காட்டிக் கொடுக்க வேண்டும். எல்லாவற்றையும் விட அதிகமாக எல்லா ஷிர்க்கிலிருந்தும் விலகிய மற்றும் பரிசுத்தமான ஒளிமயமான ஏகத்துவத்தை மீண்டும் சமுதாயத்தில் மரமாக நிலைநாட்ட வேண்டும். இவை அனைத்தும் எனது ஆற்றல்களால் நிகழாது. மாறாக, வானம் மற்றும் பூமியின் இறைவனாகிய அந்த இறைவனின் ஆற்றலால் நிகழும்.

ஆக, இந்த மேற்கோளில் ஏழு அடிப்படையான மற்றும் முக்கியமான விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவை இக்காலத்தின் தேவையும் ஆகும்.

அதனை சுருக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேற்கண்ட மேற்கோளில் எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்ன இன்ன பணிகளுக்காக இறைவன் என்னை அனுப்பி இருக்கின்றான் என்று கூறி இருக்கின்றார்கள் என்றால் அதன் பொருள் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்கள் அவ்விஷயங்களை தங்களிடம் உருவாக்கிக் கொண்டு இஸ்லாத்தின் அழகினை உலகிற்கு காட்டிக் கொடுக்க வேண்டும் என்பதாகும். எல்லாவற்றையும் விட முதலில் நமது கடமை என்னவென்றால் இறைத் தொடர்பில் நாம் முன்னேற வேண்டும். மேலும் அதனை உறுதி வாய்ந்ததாக ஆக்க வேண்டும். இறைவன் மற்றும் அவனது தூதர் மற்றும் அவனது மார்க்கம் ஆகியவற்றுடனான தொடர்பிலும், அன்பிலும், நன்றி உணர்விலும் முன்னேற வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையோடு மார்க்க போர்கள் முற்றுப் பெற்று விட்டன என்று உலகிற்கு கூற வேண்டும். இதுவும் ஒரு நோக்கமாகும். மேலும் உலகை ஒரே சமுதாயமாக ஆக்குவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் தோன்றி உள்ளார்கள். அன்னாரை இறைவன் அனைத்து நபிமார்களின் ஆடையில் அனுப்பி வைத்துள்ளான். அன்னாரது உண்மைத்துவத்தை நாம் உலகிற்கு தெளிவுபடுத்திக் கொடுக்க வேண்டும். அதற்காக நாம் நமது செயலை முன்மாதிரிகளாக ஆக்க வேண்டும். ஆன்மீக முன்னேற்றத்திற்கான முன்னுதாரனங்களையும் நாம் வெளிப்படுத்த வேண்டும். மேலும் நமது மன இச்சைகளை அகற்ற வேண்டும். எவ்வாறு இறைவன் இதற்கு முன்னர் பிரார்த்தனைகளுக்கு பதிலளித்து வந்தானோ அதே போன்று இன்றும் தனது நல்லடியார்களின் பிரார்த்தனைகளை செவிமடுக்கின்றான். அதற்கு பதில் அளிக்கின்றான். மேலும் தனது நல்லடியார்களின் மன ஆறுதலுக்கான ஏற்பாட்டையும் செய்கின்றான் என்று நாம் உலகிற்கு கூற வேண்டும். அல்லாஹ் ஏகனாவும், தனித்தவனாகவும் இருக்கின்றான் என்றும் உலகில் எல்லா பொருள்களும் அழியக் கூடியவை. ஆனால் அல்லாஹ்வின் இருப்பு மட்டும்தான் எப்போதும் நிலைபெற்றிருக்கும் என்றும் உலகிற்கு கூற வேண்டும். எனவே அந்த ஏக இறைவனுடன் தொடர்பை நிலைநிறுத்திக் கொள்வதன் மூலமாகவே நாம் உலகில் எஞ்சியிருக்க முடியும்.

நாம் மார்ச் 23 –ஆம் நாளன்று மஸீஹ் மவ்வூது தினம் கொண்டாடும் போது நாம் இந்த விஷயங்களையும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். உலகில் இந்த விஷயங்களை எல்லாம் உருவாக்குவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றினார்கள். நம்மில் அந்த விஷயங்கள் உருவாகி விட்டனவா? அல்லது அந்த புரட்சியை நம்மில் உருவாக்குவதற்காக நாம் முயற்சி செய்து கொண்டிருக்கின்றோமா? என்று ஆய்வு செய்ய வேண்டும். இன்னும் ஏராளமான இடங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னுடைய வருகையின் நோக்கத்தை விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். அன்னாருடைய மேற்கோளை நான் எடுத்து வைக்கின்றேன்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள். இன்று உலகிலுள்ள மார்க்கங்களில் திருக்குர்ஆன் கொண்டு வந்துள்ள மார்க்கம் மட்டுமே உண்மையான மார்க்கமாகவும், இறை திருப்தியை பெற்ற மார்க்கமாகவும் திகழ்கிறது என்ற தூதுச் செய்தியையும் லாயிலாஹ இல்லல்லாஹ். முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கலிமாதான் இரட்சிப்பு என்னும் வீட்டில் நுழைவதற்குரிய வாசலாக இருக்கின்றது என்ற தூதுச் செய்தியையும் முழு மனித சமுதாயத்திற்கும் எட்ட வைப்பதற்காக மட்டுமே நான் அனுப்பப்பட்டுள்ளேன். (மல்.்பூஸாத் தொகுதி 2, பக்கம் 132; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து இன்னொரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்: இந்த விஷயத்தை கவனமாக கேளுங்கள். எனது வருகையின் நோக்கம் என்ன? அடிப்படை நோக்கம் என்ன? எனது வருகையின் நோக்கம் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் இஸ்லாத்தின் வெற்றியாகும். இதிலிருந்து நான் ஏதோ ஒரு புதிய ஷரீஅத்தை கற்றுக் கொடுக்க வந்துள்ளேன் அல்லது புதிய கட்டளைகளை கொண்டு வந்துள்ளேன் என்றோ அல்லது ஒரு புதிய வேதம் என்மீது இறங்கியுள்ளது என்றோ நீங்கள் கருதி விடக்கூடாது. அவ்வாறு ஒருபோதும் இல்லை. அப்படி ஒருவர் எண்ணம் கொண்டுள்ளார் என்றால் அத்தகைய நபர் என்னைப் பொருத்தவரை மிகப்பெரிய வழிகேடராகவும், மார்க்கமற்றவராகவும் இருப்பார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஷரீஅத்தும், நபித்துவமும் முழுமை பெற்று விட்டது. இனி எந்தவொரு புதிய ஷரீஅத்தும் இறங்க முடியாது. திருக்குர்ஆன் இறுதி வேதமாகும். அதில் ஒரு கமா, புள்ளியை மாற்றுவதற்குக் கூட வாய்ப்பில்லை. ஆயினும், அதே நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரக்கத்துகளும், அருட்களும், திருக்குர்ஆனின் போதனைகளின் அருட்களும், அதன் கனிகளும் முடிந்து விடவில்லை. அவை எல்லா காலகட்டத்திலும் புத்தம் புதியதாக திகழ்கின்றன. அந்த அருட்கள் மற்றும் பரக்கத்துகளுக்கு ஆதாரமாக இறைவன் என்னை அனுப்பி இருக்கின்றான்.

இன்றைய இஸ்லாத்தின் நிலை மறைவானதல்ல. இன்று எல்லா விதமான பலவீனங்கள் மற்றும் தோல்விகளுக்கு முஸ்லிம்கள் இலக்காகி வருகின்றார்கள் என்பதை ஒட்டு மொத்தமாக அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். எல்லா அளவிலும் அவர்கள் பின்னடைவை சந்தித்து வருகின்றனர். அவர்களின் அகமும் புறமும் ஒன்றாக இல்லை. இஸ்லாம் அநாதையாகி விட்டது. இது போன்ற நிலையில் இஸ்லாத்தின் உதவிக்காவும், அதனை தழைத்தோங்க செய்யவும் தனது வாக்குறுதிக்கேற்ப இறைவன் என்னை அனுப்பி இருக்கின்றான். ஏனென்றால் அவன் கூறியுள்ளான். إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ (இன்னா நஹ்னு நஸ்ஸல்ன திக்ர வ இன்னா லஹூ ல ஹாஃபிளூன்) அதாவது, நாமே இந்த வேதத்தை இறக்கினோம். மேலும், நாமே இதனை பாதுகாப்போம். (15:10) அதாவது, இஸ்லாத்தின் போதனைகளை பரப்புவதையும் அதனை பாதுகாப்பதையும் இறைவன் தனது பொறுப்பில் எடுத்துள்ளான். அந்த நோக்கத்திற்காகவே வாக்களிக்கப்பட்ட மஸீஹை அவன் அனுப்பியுள்ளான்.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த தருணத்தில் உதவியும், ஒத்தாசையும் செய்யப்படவில்லை என்றால் பிறகு வேறு எந்த தருணத்தில் உதவி, ஒத்தாசை செய்ய அவர் வருவார். பத்ர் சந்தர்ப்பத்தில் என்ன சூழல் நிலவியதோ அதே சூழல் தற்போது 14 ஆம் நூற்றாண்டில் நிலவுகிறது. அதைப்பற்றி இறைவன் கூறுகின்றான். وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ (வலகத் நஸ்ரகுமுல்லாஹு பி பத்ரின் வ அன்(த்)தும் அஸில்லா) அதாவது, பத்ர் போரில் நீங்கள் மிகவும் குறைவானவர்களாக இருந்தீர்கள். அல்லாஹ் நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்தான். (3:124)

அவர்கள் கூறினார்கள்: இந்த வசனத்தில் உண்மையில் ஒரு முன்னறிவிப்பு அமைந்திருக்கிறது. அதாவது 14 –ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் பலவீனமாகி விடும். அப்போது அல்லாஹ் தனது பாதுகாப்பிற்கான வாக்குறுதிக்கேற்ப இஸ்லாத்திற்கு உதவி செய்வான். அவ்வாறிருக்க அவன் இஸ்லாத்திற்கு உதவி செய்ததை குறித்து நீங்கள் ஏன் ஆச்சரியம் அடைகின்றீர்கள்? எனக்கு தஜ்ஜால் என்றும் பொய்யன் என்றும் பெயர் வைக்கப்படுவதை எண்ணியும், என்மீது அபாண்டங்கள் சுமத்தப்படுவதை எண்ணியும் எனக்கு வேதனை இல்லை. ஏனென்றால் எனக்கு முன்பு தோன்றிய நல்லடியார்களோடு எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டதோ அதே போன்று என்னுடனும் நடந்து கொள்வது அவசியமானதாகும். அந்த பழைய நடைமுறையிலிருந்து நானும் பங்கு பெற வேண்டியதுள்ளது. (மல்.்பூஸாத் தொகுதி 8, பக்கம் 245-246; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து, இன்னொரு சந்தர்ப்பத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் நோக்கத்தை எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: எனது வருகைக்கு இரு நோக்கங்கள் உள்ளன. முஸ்லிம்களைப் பொருத்தவரை என்னவென்றால், அவர்கள் உண்மையான தக்வா மற்றும் பரிசுத்தத் தன்மையில் நிலை பெற வேண்டும். உண்மையான முஸ்லிம் என்பதற்கான பொருளில் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப முஸ்லிம்களாக அவர்கள் ஆகிவிட வேண்டும். கிறித்தவர்களைப் பொருத்தவரை சிலுவை முறிக்கப்பட வேண்டும். அவர்களின் பொய் தெய்வம் அவர்களை விட்டு அகல வேண்டும். உலகம் முற்றிலும் அதனை மறந்து விட வேண்டும். ஏக இறைவனின் இறை வணக்கம் செய்யப்படுதல் வேண்டும். எனது இந்த நோக்கத்தைக் கண்டு இந்த மக்கள் ஏன் என்னை எதிர்க்கின்றார்கள். அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். எந்த பணிகள் நயவஞ்சக இயல்புடனும் உலகின் அசுத்தமான வாழ்க்கையுடனும் இருக்குமோ அவை தாமாகவே அந்த விஷயத்தினால் அழிந்து போய் விடும். ஒரு பொய்யர் வெற்றி பெற முடியுமா? இன்னல்லாஹ லா யஹ்தீ மன்ஹுவ முஸ்ரிஃபுன் கஸ்ஸாப் அதாவது, நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறியவர்கள் மற்றும் பொய்யர்களை ஒருபோதும் வெற்றி பெறச் செய்வதில்லை.

அவர்கள் கூறினார்கள்: பொய்யனின் அழிவிற்கு அவனது பொய்யே போதுமானதாகும். ஆனால் எந்த பணி அல்லாஹ்வின் கம்பீரம் மற்றும் அவனது தூதரின் பரக்கத்துகளின் வெளிப்பாடாகவும் ஆதாரமாகவும் இருக்குமோ மேலும் எந்த செடியை இறைவன் தனது கரங்களால் நட்டி இருப்பானோ அதன் பாதுகாப்பினை மலக்குகளே செய்கின்றார்கள். அதனை அழிப்பதற்கு எவர் இருக்கின்றார்? நினைவில் கொள்ளுங்கள். எனது அமைப்பு வெறும் வணிகமயமாக இருந்திருந்தால் அதன் பெயரும், அடையாளமும் அழிந்து விடும். ஆனால் அல்லாஹ்வின் புறமிருந்து இருக்கிறது என்றால் நிச்சயமாக அல்லாஹ்வின் புறமிருந்தே தோன்றி இருக்கின்றது. முழு உலகமும் அதனை எதிர்ப்பதில் முன்னேறினாலும் இந்த அமைப்பு பரவும். முன்னேற்றம் அடையும். மலக்குகள் அதனை பாதுகாப்பார்கள் – இன்ஷா அல்லாஹ். ஒரு நபர் கூட என்னுடன் இல்லாமல் போனாலும் கூட எவரும் எனக்கு உதவி செய்யாமல் போனாலும் கூட இந்த அமைப்பு வெற்றி பெறும் என நான் நம்புகின்றேன். எதிர்ப்பை நான் ஒருபோதும் பொருட்படுத்துவதில்லை. ஏனென்றால் அதனை நான் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமானதாக கருதுகின்றேன். இறைவனின் நபியும், கலீஃபாவும் உலகில் தோன்றி மக்கள் அனைவரும் எவ்வித சலசலப்புமின்றி அவரை அப்படியே ஒப்புக் கொண்டதாக உலகில் ஒருபோதும் நிகழவில்லை. உலகத்தின் நிலை வினோதமானதாகும். மனிதன் எவ்வளவுதான் உண்மையான இயல்பை உடையவனாக இருந்தாலும் சரியே. பிறர் அவனைப் பின் தொடர்வதை விட்டு விடுவதில்லை. எப்போதும் அவர்கள் ஆட்சேபனை செய்து கொண்டே இருப்பர். (மல்.்பூஸாத் தொகுதி 8, பக்கம் 148; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இன்று 127 ஆண்டுகள் கழிந்த பிறகும் நாம் பார்க்கின்றோம். அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைகள் அன்னாருடனேயே இருக்கின்றது. இந்த அமைப்பு அல்லாஹ்வின் அருளினால் முன்னேற்றமடைந்து வருகின்றது. எனவே நமது கடமை என்னவென்றால் நாம் நமது நிலைமைகளை தூய நிலைகளாக மாற்றி நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின்

நோக்கத்தை அடைவதற்கு உதவியாளர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அன்னாரின் வருகையின் நோக்கத்தின் அருட்களிலிருந்து நாம் பங்கு பெற வேண்டும். அன்னாரை ஒப்புக் கொள்வதினால் கிடைக்கின்ற அருளிலிருந்து நாம் பயன் பெற வேண்டும். அவ்வாறு நாம் செய்யவில்லை என்றால் அன்னார் கூறியது போன்று நம்மில் எவரது தேவையும் அவனுக்கு இல்லை. அல்லாஹ்வே மலக்குகளின் மூலமாக அன்னாருக்கு உதவி செய்து அன்னாரின் அமைப்பிற்கு முன்னேற்றம் தந்து விடுவான். முன்னேற்றம் தந்து கொண்டும் இருக்கின்றான்.

அடுத்து, தனது வருகையின் நோக்கத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் என்னை அனுப்பி இருக்கின்றான். ஏனென்றால் உலகில் மறைந்திருக்கின்ற கருவூலங்களை நான் வெளிப்படுத்த வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். ஒளிமயமான முத்துக்களின் மீது வீசப்பட்ட தீய அசுத்தமான ஆட்சேபனைகள் என்ற சகதியை நான் சுத்தப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளேன். இறைவனின் தன்மானம் தற்போது பொங்கி எழுந்துள்ளது. திருக்குர்ஆனின் ஒவ்வொரு தீய எதிரியின் ஆட்சேபனை என்னும் கறைகளிலிருந்து தூய்மைப்படுத்தி அதன் கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். சுருக்கமாக, எதிரிகள் எழுதுகோலால் நம்மை தாக்கும் போது நாம் அவர்களிடம் கையை உயர்த்தி சண்டையிட செல்வது எவ்வளவு மடமையாகும். நான் உங்களுக்கு தெளிவாக கூறுகின்றேன். அது போன்ற நிலையில் இஸ்லாத்தின் பெயரில் சண்டை மற்றும் போரின் வழிமுறையை உருவாக்கிக் கொள்கின்றார் என்றால் அத்தகைய நபர் இஸ்லாத்தை அவமானப்படுத்தும் நபராவார். தேவையின்றி அனாவசியமாக வாள் ஏந்துவது என்பது இஸ்லாத்தின் நோக்கமாக ஒருபோதும் இருந்ததில்லை.

தற்போதைய காலத்தில் நான் கூறியது போன்று போர் என்பது கலையாக மாறி விட்டது. தற்போது மார்க்கப் போர்களுக்கான இடமில்லை. இன்னும் கூறப்போனால் உலக நோக்கங்களே போர்களின் அடிப்படையாக ஆகிவிட்டது. எனவே ஆட்சேபனை செய்பவர்களுக்கு பதில் அளிப்பதற்கு பகரமாக அவர்களுக்கு எதிராக வாள் ஏந்துவது எவ்வளவு அநீதியாகும்? தற்போது காலத்திற்கேற்ப போரின் வடிவமும் மாறி விட்டது. எனவே முதலில் எல்லாவற்றையும் விட தனது உள்ளத்தைக் கொண்டும், மூளையைக் கொண்டும் பணி செய்வதும் மனதை தூய்மைப்படுத்துவதும் அவசியமாகும். இறையச்சம் மற்றும் நேர்மையுடன் இறை உதவியையும் வெற்றியையும் வேண்ட வேண்டும். இது இறைவனின் உறுதியான சட்டம் மற்றும் நிலையான வழிமுறையாகும். முஸ்லிம்கள் வெறும் வாய்ப் பேச்சுக்களால் போட்டியில் வெற்றியை பெற நாடினார்கள் என்றால் அது சாத்தியமில்லை. அல்லாஹ் வீண் வாய்ப் பேச்சுக்களை வாதங்களை விரும்புவதில்லை. அவன் உண்மையான இறை அச்சத்தையும், உண்மையான தூய்மையையும் விரும்புகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்: اِنَّ اللّٰہَ مَعَ الَّذِیۡنَ اتَّقَوۡا وَّ الَّذِیۡنَ ہُمۡ مُّحۡسِنُوۡنَ (இன்னல்லாஹ மஅல்லதீனத் தகவ் வல்லதீனஹும் முஹ்ஸினூன்) 16:129) (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 60-61; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, இந்த தக்வாவை நாம் நம்மிடத்தில் உருவாக்கிக் கொண்டு இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும். மேலும் இஸ்லாம் பரவுவதற்கான நிபந்தனை தக்வா ஆகும் என்பதை முஸ்லிம்களுக்கும் எடுத்துரைக்க வேண்டும். அநீதி மற்றும் அக்கிரமங்களில் முன்னேறுவதற்கு பகரமாக தக்வாவை உருவாக்கிக் கொண்டு அதில் முன்னேற வேண்டும். இஸ்லாத்தின் பெயரால் நடக்கின்ற இந்த தாக்குதல்கள் இஸ்லாத்திற்கு ஒருபோதும் பயன் அளிக்காது. மாறாக, அவை அவப்பெயருக்கு காரணியாக அமையும். அப்பாவி மக்களின் கொலை அல்லாஹ்வின் வெறுப்பிற்கு காரணியாக ஆகி வருகிறது. கடந்த நாட்களில் அப்பாவி மக்கள் பெல்ஜியத்தில் கொலை செய்யப்பட்டார்கள். பல அப்பாவி மக்களை கொலை செய்து, நூற்றுக்கணக்கான மக்களை காயப்படுத்தி இருக்கின்ற இந்த தீவிரவாத தாக்குதல் ஒருபோதும் இறை திருப்தியை பெற்றுத் தரக்கூடியதாக இருக்க முடியாது. இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மார்க்கத்திற்காக போர் செய்வது ஹராமாகும் என்று தெளிவாக எடுத்துரைத்து விட்டார்கள். அவ்வாறிருக்க, இந்த செயல்கள் இறை கோபத்திற்கு காரணியாகவே அமையும். இக்காலத்தில் எங்களுக்கு இந்த செய்தி வந்தடையவில்லை என்று எவரும் கூற முடியாது. அனைவரும் நன்கு அறிவர். மார்க்கப் போர்கள் தற்போது ஹராமாகும் என்ற தூதுச் செய்தி மிகத் தெளிவான முறையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

அல்லாஹ் மார்க்கத்தின் பெயரால் அநீதி இழைக்கக்கூடிய அல்லது முஸ்லிம்களாக இருந்து கொண்டு அநீதி இழைக்கக் கூடியவர்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் ஆட்சியாளர்களாக இருந்தாலும் சரி. அல்லது பிரிவினைவாதிகளாக இருந்தாலும் சரியே. அவர்கள் அனைவரும் காலத்தின் இமாமின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும். மேலும் அநீதிகளிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இக்காலத்தில் வழங்கியுள்ள உண்மையான ஆயுதங்களை அவர்கள் பயன்படுத்த வேண்டும்.

அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: தற்போதைய காலத்தின் தேவை வாள் இல்லை. மாறாக, எழுதுகோல்தான் என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். நமது எதிரிகள் ஏராளமான கேள்விகளை எழுப்பி உள்ளார்கள். அறிவியல் அளவில் அல்லாஹ்வின் உண்மையான மார்க்கத்தின் மீது தாக்குதல் நடத்த விரும்பியுள்ளார்கள். நான் எழுதுகோல் எனும் ஆயுதத்தை ஏந்தி அறிவியல் மற்றும் அறிவின் முன்னேற்றத்தின் களத்தின் இறங்கி பணி செய்ய வேண்டும் இறைவன் எனக்கு கவனமூட்டியுள்ளான். மேலும் இஸ்லாத்தின் ஆன்மீக வீரத்தையும், மறைமுகமான ஆற்றலின் அற்புதங்களையும் நான் காட்ட வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். இந்த களத்திற்கு உரியவனாக நான் எப்படி இருக்க முடியும்? இது இறைவனின் அருளாகும். அவனது அளவற்ற கருணையாகும். என்னைப் போன்ற எளிய மனிதனின் கைகளின் மூலமாக அவனது மார்க்கத்தின் கண்ணியம் வெளிப்பட வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். நான் தற்போது இஸ்லாத்தின் மீது நமது எதிரிகள் செய்துள்ள ஆட்சேபனைகள் மற்றும் தாக்குதல்களை கணக்கீடு செய்தேன். அப்போது என்னைப் பொருத்தவரை அதன் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது.

தற்போது அந்த எண்ணிக்கை இன்னும் அதிகரித்திருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

மேலும் கூறினார்கள்: இஸ்லாத்தின் அடித்தளம் பலவீனமான விஷயங்களின் மீது அமைந்துள்ளதால்தான் அதன் மீது 3000 ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றன என்று எவரும் எண்ணி விடக்கூடாது. அவ்வாறு ஒருபோதும் இல்லை. இந்த ஆட்சேபனைகள் அறிவீனர்கள் மற்றும் குருடர்களின் பார்வையில் ஆட்சேபனையாக இருக்கலாம். ஆனால், நான் உங்களுக்கு மெய்யாகவே கூறுகின்றேன். எங்கு நான் இந்த ஆட்சேபனைகளை கணக்கீடு செய்தேனோ அங்கு இந்த விஷயத்தையும் நான் சீர்தூக்கிப் பார்த்தேன். இந்த ஆட்சேபனைகளுக்குப் பின்னால் உண்மையில் ஏராளமான உண்மைகள் இருக்கின்றன. பார்வையற்ற தன்மையின் விளைவாக ஆட்சேபனை செய்யக் கூடியவருக்கு அது தென்படவில்லை. உண்மையில் இது இறைவனின் ஒரு நுட்பமான செயலாகும். எங்கு ஆட்சேபனை செய்கின்ற குருடர் வந்து நின்று விடுகின்றாரோ அங்கு இறைஞானத்தின் மறைவான கருவூலங்கள் வைக்கப்படுகின்றன. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 59-60; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது)

இறைவன் இஸ்லாத்தின் ஒளியைக் காட்டுவதற்காக தன்னை அனுப்பி இருப்பதாக அன்னார் எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: கிறித்தவர்களின் கொள்கை எப்படிப்பட்டதாக உள்ளதென்றால் அதனை அவர்களால் கூட புரிந்து கொள்ள முடியவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: அது கழுத்தில் தொங்க விடப்பட்ட மேளமாகும். அதனை இந்த மக்கள் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். சுருக்கமாக, இந்த மக்களின் கொள்கைகளை எதுவரை நாம் எடுத்துரைத்துக் கொண்டு செல்வது? இஸ்லாம் கொண்டு வந்துள்ளதே உண்மையாகும். இஸ்லாத்தின் மூலமாக கிடைக்கின்ற ஒளியை மக்களுக்கு காட்டிக் கொடுப்பதற்காகவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான். உண்மை என்னவென்றால், இறைவன் இருக்கின்றான். அவன் ஏகனாவான். என்னைப் பொருத்தவரை இஞ்சீலும், திருக்குர்ஆனும், நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து வேதங்களும் உலகிற்கு வராமல் இருந்திருந்தாலும் கூட இறைவனின் ஏகத்துவம் நிரூபணமாகி இருக்கும். ஏனென்றால், அதற்கான வடிவம் மனித இயல்பிலேயே இருக்கின்றது. இறைவனுக்கு ஒரு மகனை உருவாக்குவது என்பது இறைவனின் மரணத்தின் மீது நம்பிக்கை கொள்வதாகும். ஏனென்றால், மகன் என்பவர் நினைவு சின்னமாக இருப்பார். இப்போது மஸீஹ் இறைவனின் மகன் என்றால் இறைவன் மரணிக்க இருக்கின்றானா? என்ற கேள்வி வரும். சுருக்கம் என்னவென்றால், கிறித்தவர்கள் தங்களது கொள்கைகளில் இறை மகத்துவத்தையும் கருத்தில் கொள்வதில்லை. மனித ஆற்றல்களுக்கும் மதிப்பளிக்கவில்லை. மேலும் எந்த விஷயங்களுக்கு விண்ணொளியின் உதவி ஒத்தாசை இல்லையோ அந்த விஷயத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். அற்புதங்களைக் காட்டக்கூடிய ஒரு கிறித்தவர் கூட நமக்கு தென்படவில்லை. தனது ஈமானை முஃமின்களுக்குரிய அடையாளங்களுடன் நிரூபணம் செய்யக்கூடிய ஒருவர் கூட இல்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் உதவி, ஒத்தாசை என்னும் அடையாளம் இஸ்லாத்தினுடனேயே இருந்துள்ளது. இந்த பெருமை மற்றும் மேன்மை இஸ்லாத்திற்கு மட்டுமே கிடைத்துள்ளது. இக்காலத்திலும் இறைவன் இஸ்லாத்திற்கு அதனை விலக்கி வைக்கவில்லை. இஸ்லாத்தின் அடையாளமாக இருக்கக்கூடிய உதவி ஒத்தாசைக்கான அடையாளங்களை இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்காக உலகிற்கு வெளிப்படுத்திக்காட்ட நான் வந்துள்ளேன். எவர் அமைதியான உள்ளத்துடன் உண்மையை பெறுவதற்காக என்னிடத்தில் வருகின்றாரோ அவர் அருளுக்குரியவர் ஆவார். உண்மையைக் கண்ட பிறகு அதனை ஒப்புக் கொள்கின்ற நபரும் அருளுக்குரிய நபர் ஆவார். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 330-331; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து முஸ்லிம்களின் தவறான கொள்கைகளை மறுத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள். முஸ்லிம்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் விண்ணில் இருப்பதாக நம்புகின்றார்கள். அதன் உண்மையை தெளிவுபடுத்தியவாறு முஸ்லிம்களுக்கு கூறினார்கள்.

கிறித்தவர்கள் முஸ்லிம்களிடம் உருவாக்கிய இந்த தவறான கொள்கைகளை அகற்றி அதனை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் என்பதற்காக நான்

அனுப்பப்பட்டுள்ளேன். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலிருந்து உயிருடன் இறக்கப்பட்டு அதிலிருந்து தப்பித்தார்கள் என்பது பற்றி திருக்குர்ஆனில் சரியான மற்றும் தெளிவான அறிவு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வேதனை என்னவென்றால் கடந்த ஆயிரம் வருடங்களில் எங்கு இஸ்லாத்தின் மீது ஏராளமான சோதனைகள் வந்ததோ அங்கு இந்த விஷயமும் இருளில் படிந்து கிடந்தது. துரதிஷ்டவசமாக முஸ்லிம்களிடம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் விண்ணிற்கு உயர்த்தப்பட்டார்கள். மேலும் மறுமை நாளிற்கு அருகில் விண்ணிலிருந்து இறங்கி வருவார்கள் என்ற கொள்கை முஸ்லிம்களிடம் உறுதியாகி விட்டது. ஆனால் இந்த 14 ஆம் நூற்றாண்டில் இறைவன் என்னை அனுப்பி இருக்கின்றான். முஸ்லிம்களிடம் என்னென்ன ஆழமான தவறுகள் ஏற்பட்டிருக்கின்றதோ அவற்றை அகற்றுவதற்காகவும் இஸ்லாத்தின் உண்மையை உலகில் வெளிப்படுத்துவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். வெளியிலிருந்து இஸ்லாத்தின் மீது செய்யப்படுகின்ற ஆட்சேபனைக்கு நான் பதில் அளிப்பதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் பிற பொய் மார்க்கங்களின் நிலையை தெளிவுபடுத்தவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். குறிப்பாக சிலுவை மார்க்கம். அதாவது கிறித்தவ மார்க்கத்தின் தவறான கொள்கைகளை அகற்றுவதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஏனென்றால் அவை மனிதனுக்கு மிக அபாயகரமான முறையில் தீங்கு தரக்கூடியவையாகும். மனிதனின் ஆன்மீக ஆற்றல்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஒரு தடையாகவும் இருக்கின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 331-332; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் பற்றி எடுத்துரைத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: தற்போது மஸீஹ் வருவதற்குரிய தேவை என்ன உள்ளது என்ற கேள்வி உள்ளது? மற்ற காரணிகள் மற்றும் அவசியங்களை விட்டு விடுவோம். மூஸா என்ற சொல்லுடன் ஒப்புமைக்கான தொடர்பு இந்த அமைப்புடன் மிக அதிகமாக உள்ளது. மற்ற பிற விஷயங்களை விட்டு விடுங்கள். ஆனால் இந்த உம்மத்துடன் ஹஸ்ரத் மூஸாவின் உம்மத்தோடு இருக்கின்ற தொடர்பு மிக அவசியமான ஒன்றாகும். ஏனென்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தோன்றிய பிறகு 14 ஆம் நூற்றாண்டில் தோன்றினார்கள். சுருக்கமாக, நிழலுக்கான ஒரு முன்னுதாரனத்தை நான் எடுத்து வைக்கின்றேன். ஆனால் எவர் இவ்வாறு கூறுகின்றாரோ, அதாவது ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களே மீண்டும் விண்ணிலிருந்து வர வேண்டும் என்று கூறுகின்றார்களோ அவர்கள்தான் அதற்கான முன்னுதாரணத்தை எடுத்துக் காட்ட வேண்டும். அவர்களால் அவ்வாறு செய்ய முடியாமல் போனால் நிச்சயமாக அவர்களால் செய்ய முடியாது. அவ்வாறிருக்க அவர்கள் ஏன் இது போன்ற விஷயங்களை பேசியுள்ளார்கள். சுயமாக உருவாக்கிக் கொண்ட விஷயங்கள் இருக்கின்றன. வீண் பேச்சிலிருந்து விலகி இருங்கள். ஏனென்றால் அது அழிவிற்குரிய பாதையாகும். யூதர்கள் இறைவனின் ஒரு நபியை நிராகரித்ததன் காரணமாக அவர்கள் மீது இறை தண்டனை இறங்கியது. இந்த நிராகரிப்பின் காரணமாக அவர்களுக்கு இந்த துன்பமும் ஏற்பட்டது. அவர்கள் உவமையை உண்மையின் மீது வெளிப்படுத்தினார்கள். அதே போன்ற வழக்கு இன்றும் நிலுவையில் உள்ளது. அதாவது எனக்கு முஸ்லிம்களின் நிலையின் மீது வியப்பு ஏற்படுகின்றது. ஏனென்றால் அவர்களுக்கு முன்பு யூதர்களின் ஒரு முன்னுதாரணம் இருக்கின்றது. ஐந்து நேரம் தமது தொழுகைகளில் கைரில் மக்லூபி அலைஹிம் என்ற துஆவை செய்கின்றனர். மேலும் இதன் பொருள் யூதர்கள் ஆவர் என்று அனைவரும் ஒட்டு மொத்தமாக ஒப்புக் கொள்கின்றனர்.

அவ்வாறிருக்க அவர்கள் ஏன் இந்த வழிமுறையை கையாண்டார்கள் என்பது எனக்கு புரியவில்லை. ஒரே வடிவிலான வழக்கு ஒரு தூதரின் முன்னிலையில் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. தற்போது அந்த தீர்ப்பிற்கு எதிராக விண்ணிலிருந்து மஸீஹையே இறக்க வேண்டும் என்று ஏன் முயற்சிக்கிறார்கள்? மஸீஹ் அவர்களே யஹ்யா நபியினுடைய அந்த வழக்கின் தீர்ப்பை வழங்கி இருக்கிறார். இரண்டாம் வருகை என்பது நிழல் வடிவில் நிகழும் என்பதும் பொருளாகும். எலியாவின் வடிவில் யஹ்யா தோன்றினார். ஆனால் இந்த முஸ்லிம்கள் தற்போது இந்த முன்னுதாரணங்கள் இருந்தும் கூட மஸீஹை எதுவரை விண்ணிலிருந்து இறக்கி விட மாட்டார்களோ அதுவரை திருப்தி கொள்ள மாட்டார்கள். ஆனால் நான் கூறுகின்றேன். நீங்களும் உங்களுடைய அனைத்து உதவியாளர்களும் இணைந்து துஆ செய்யுங்கள். விண்ணிலிருந்து மஸீஹ் இறங்கி வர வேண்டும் என்று துஆ செய்யுங்கள். பின்னர் அவர் இறங்குகின்றாரா இல்லையா என்று பாருங்கள். நான் நிச்சயமாக கூறுகின்றேன். அவர்கள் முழு வாழ்நாளும் முட்டிக் கொண்டிருந்தாலும் அது போன்ற துஆக்கள் செய்து செய்து மூக்கு தேய்ந்து போனாலும் விண்ணிலிருந்து எவரும் வர மாட்டார். ஏனென்றால் வர வேண்டியவர் வந்து விட்டார். (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 3-4; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இக்கருத்தை முஸ்லிம்கள் புரிந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை எதிர்ப்பதற்கு பகரமாக அவரோடு இணைந்து இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகில் செயல்படுத்தக் கூடியவராக நாம் திகழ வேண்டும். எல்லா மட்டத்திலும் நீதியையும், அமைதியையும் நிலை நாட்ட முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாத்திற்கு எதிராக நிற்கின்ற முஸ்லிம் அல்லாதவர்கள் மற்றும் மார்க்கமற்றவர்கள் என்ற பிரிவினர்கள் ஆகியோருக்கு இஸ்லாத்தின் உண்மை வடிவத்தைக் காட்டி இஸ்லாத்திற்கு தொண்டு செய்யக்கூடிய உண்மையான முஸ்லிம்களாக மாற வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது உண்மைத்துவத்திற்காக சத்தியம் செய்தவாறு நான்கு அடையாளங்களை எடுத்துரைக்கின்றார்கள்.

ஒன்று, அரபி மொழியில் புலமைக்கான அடையாளம். முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இந்த எளியவனுக்கு அரபியில் ஒரு சிறிய பாடம் கூட தெரியாது என்று எழுதிய அந்த தருணத்திலிருந்து இறைவன் எனக்கு இந்த அடையாளத்தை வழங்கியுள்ளான். நமக்கு அரபி பாடம் தெரியும் என்று இதற்கு முன்னர் ஒருபோதும் நாம் வாதம் செய்தது கிடையாது. எந்த மக்கள் அரபி மொழியின் எழுத்துக்களையும் அதன் இலக்கணத்தையும் படித்துள்ளார்களோ அவர்களால் அதன் கடினத்தின் தன்மையை கற்பனை செய்து பார்க்க முடியும். அவர்களால் அதன் சிறப்புகளை கருத்தில் கொள்ள முடியும்.

அன்னார் கூறுகின்றார்கள்: மவ்லவி (மவ்லவி அப்துல் கரீம் சாஹிப்) ஆரம்பம் முதல் எவ்வாறு அல்லாஹ் அசாதாரண முறையில் உதவி செய்து வருகின்றான் என்பதை பார்த்து வந்துள்ளார்கள். கஷ்டமான மொழியில் உரிய சந்தர்ப்பதில் சொல் கிடைக்கவில்லை எனும் போதுதான் பெரிய கஷ்டம் ஏற்படுகின்றது. அப்போது அல்லாஹ் அந்த சொல்லை அறிவித்து தருகின்றான். புதிதாக சுயமாக ஒரு மொழியை உருவாக்கிக் கொள்வது எளிதாகும். ஆனால் பழமையான மொழி என்பது கடினமாகும். அடுத்து நாம் இந்த புத்தகங்களை முன் வைத்து பரிசுகள் வழங்குவதாக அறிவித்தோம். மேலும் கூறினோம். நீங்கள் எவரிடம் உதவி பெற விரும்புகின்றீர்களோ பெற்றுக் கொள்ளுங்கள். அரபி மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்களைக் கூட உதவிக்கு அழைத்துக் கொள்ளுங்கள். அவர்களால் ஒருபோதும் அந்த விஷயத்தில் வெற்றி பெற முடியாது என்று இறைவன் எனக்கு உறுதியளித்து இருக்கின்றான். ஏனென்றால் இந்த அடையாளம் திருக்குர்ஆனின் அற்புதத்திற்குரிய அடையாளமாக நிழல் வடிவில் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுதல் என்பது இரண்டாவது அடையாளம் ஆகும். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விதிவிலக்காக வைக்கின்றேன். அவர்களது அந்தஸ்த்து மிக உயர்ந்ததாகும். அவர்கள் மூலமாகவே எனக்கு இவை அனைத்தும் கிடைத்திருக்கின்றன. எனது துஆக்கள் எந்த அளவு ஒப்புக் கொள்ளப்படுகின்றதென்றால் அது போன்று வேறு எவரது துஆவும் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று என்னால் கூற முடியும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைத் தவிர்த்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது துஆக்கள் எந்த அளவிற்கு ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதோ அது போன்று வேறு எந்தவொரு நபியின் துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படவில்லை. அதன் எண்ணிக்கை பத்தாயிரம் என்றோ இரண்டு இலட்சம் என்றோ என்னால் கூற இயலாது. சில அடையாளங்கள் எப்படிப்பட்டது என்றால் அவற்றில் ஒரு உலகமே நன்கு அறிந்திருக்கின்றது.

முன்னறிவிப்புகள் என்பது மூன்றாவது அடையாளமாகும். அதாவது மறைவான செய்திகளை அறிவித்தல். சில ஜோதிடர்களும் தோராயமாக சில விஷயங்களை கணித்து கூறி விடுகின்றனர். அவர்களின் கூற்றின் ஏதாவதொரு பகுதி சரியாகவும் இருக்கின்றது. அதே போன்று வரலாறு நமக்கு கூறுகின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் சில பாதிரிகள் இருந்தார்கள். அவர்கள் மறைவான செய்தியை அறிவித்து வந்தார்கள். அந்த வகையில் சத்தீஹ் என்ற ஒரு பாதிரி இருந்தார். இந்த ஜோதிடர்கள் மற்றும் பாதிரியார்களின் மறைவான செய்தி மற்றும் இறைவன் புறமிருந்து தோன்றிய நபி மற்றும் இல்ஹாம் கிடைக்கப் பெற்றவர்களுடைய மறைவான செய்திக்கும் இடையில் ஒரு வித்தியாசம் உள்ளது. இல்ஹாம் கிடைக்கப் பெற்றவருடைய மறைவான செய்தியை வெளிப்படுத்துதல் என்பது தன்னுள் ஓர் இறை ஆற்றலையும் இறை தாக்கத்தையும் கொண்டிருக்கும். அந்த வகையில் திருக்குர்ஆன் மிகத் தெளிவாக கூறுகின்றது. لَا يُظْهِرُ عَلٰى غَيْبِهٖٓ اَحَدًا اِلَّا مَنِ ارْتَضٰى مِنْ رَّسُوْلٍ (லா யுழ்ஹிரு அலா கைபிஹீ அஹதன் இல்லா மனிர்தழா மிர்ரஸூல்) (72:28). இங்கு வெளிப்பாடு என்ற சொல்லே இதனுள் ஒரு வகையான அழகும் ஆற்றலும் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

நான்காம் அடையாளம் திருக்குர்ஆனின் ஆழமான ஞானம் மற்றும் இறைஞானமாகும். ஏனென்றால் திருக்குர்ஆனின் ஞானம் என்பது எவர் தூய்மைபடுத்தப்பட்டிருக்கின்றாரோ அவரைத் தவிர்த்து வேறு எவருக்கும் திறந்து கொடுக்கப்படவில்லை. لَا يَمَسُّهٗٓ اِلَّا الْمُطَهَّرُوْنَ (லா யமஸ்ஸுஹூ இல்லல் முதஹ்ஹரூன்) மேலே நான் பலமுறை கூறி இருக்கின்றேன். எனது எதிரிகளும் ஓர் அதிகாரத்திற்கு விளக்கவுரை எழுதட்டும். நான் ஓர் அதிகாரத்திற்கு விளக்கவுரை எழுதுகின்றேன். பின்னர் போட்டி போட்டுப் பார்க்கலாம். ஆனால் எவரும் அதற்கு முன்வரவில்லை. இவருக்கு அரபி பாடம் வராது என்று முஹம்மது ஹுஸைன் பட்டாலவி போன்றோர் அறிவித்து விட்டார்கள். அவர்களுக்கு முன்னிலையில் புத்தகங்கள் முன் வைக்கப்பட்ட போது அவர்கள் மிக பணிவோடு அந்த ஆட்சேபனைகளை கைவிட்டு விட்டார்கள். ஒரு பக்கத்தை கூட அவர்கள் உருவாக்கி வைத்திருக்கலாம். மேலும் அதனை அவர்கள் அரபி என்று கூறி இருக்கலாம். அவர்களால் அதை செய்ய முடியாமல் போனது. சுருக்கமாக, இந்த நான்கு அடையாளங்கள் தான் குறிப்பாக எனது உண்மைத்துவத்திற்காக எனக்கு கிடைத்திருக்கின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 277-278; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். 1899 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் தேதி எழுதினார்கள். பரேலியிலிருந்து சில நாட்களுக்கு முன்பு ஒரு சகோதரர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடிதம் எழுதினார். அதில் அவர், எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றி இறைவனின் தூதர் ஹதீஸ்களில் செய்தி தந்துள்ளாரோ அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நீங்கள் தான் என்று சத்தியம் செய்து கூறுங்கள் என்று கேட்டார். நீங்கள் இதற்கு பதில் அளியுங்கள் என்று கூறப்பட்டது. மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். நான் சாதாரணமாக அக்கடிதத்திற்கு பதிலளித்து விட்டேன். தர்யாக்குல் குலூப் என்ற நூலிலிருந்து அந்த நபருக்கு திருப்தி அளிக்கக்கூடிய ஒரு சில சொற்றொடர்களை எடுத்து எழுதி விட்டேன். ஆனால் அந்த நபருக்கு அது போதுமானதாக இல்லை. அவர் மீண்டும் எனக்கு, மிர்ஸா சாஹிப் அவர்கள் தனது கைகளாலேயே சத்தியம் செய்து எழுத வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என எழுதினார். எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றி திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் கூறப்பட்டுள்ளதோ அவர்தான் இவர் என்று சத்தியம் செய்து கூற வேண்டும். நான் மாலை நேரத் தொழுகைக்குப் பிறகு மை குப்பியையும், எழுதுகோலையும், தாளையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னர் வைத்து விட்டேன். ஒருவர் இவ்வாறு எழுதுகின்றார் என்று நான் கூறினேன். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், உடனடியாக தாளைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். மேலும் அதில் சில வரிகளையும் எழுதினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதினார்கள். நான் இதற்கு முன்பும் இதனை ஒப்புக் கொண்டவாறு சத்தியம் செய்து எனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளேன். இப்போதும் நான் சத்தியம் செய்து எழுதுகின்றேன். எந்த இறைவனின் கையில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹதீஸ்களில் வழங்கியுள்ள புஹாரி ஹதீஸிலும், சஹீஹ் முஸ்லிம் ஹதீஸிலும் இடம் பெற்றுள்ள அந்த செய்திகளுக்கேற்ப தோன்றிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நானாகவே இருக்கின்றேன். இவ்விரண்டும் ஸிஹா ஸித்தா – நம்பத்தகுந்த 6 நூல்களுள் உள்ளன. وَكَفٰى بِاللّٰهِ شَهِيْدًا (வ கஃபா பில்லாஹி ஷஹீதா) – சாட்சியாளனாக இருக்க இறைவனே போதுமானவன். பின்னர் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி என தனது பெயரை எழுதினார்கள்.

மவ்லவி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார். இதனை குறிப்பிடுவதற்கு எனக்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன. ஒன்று, எனது ஜமாஅத்தின் ஈமானை அதிகரிக்க வேண்டும். மேலும் இங்குள்ள பார்வையாளர்களுக்கு இந்த நேரத்தில் இங்கு எந்த இன்பமும் மகிழ்ச்சியும் கிடைத்துக் கொண்டிக்கின்றதோ அது எனது ஜமாஅத்தைச் சார்ந்த அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும். அவர்கள் உண்மையான உள்ளத்துடன் ஒப்புக் கொண்டுள்ளார்கள். அவர்களுக்கு புதிய ஈமான் கிடைத்திருக்கின்றது. இரண்டாவதாக நிராகரிப்பாளர்கள் மற்றும் தவறான எண்ணமுடையவர்கள் இந்த தெளிவான சத்தியத்தை நிதானமான உள்ளத்துடன் சீர்தூக்கி பார்க்க வேண்டும். பொய்யருக்கும், பழி சுமத்துபவருக்கும் இடையிலுள்ள வித்தியாசம் இதுவாகும். ஏனென்றால் அது போன்ற மனிதருக்கு இதற்கான தைரியம் ஏற்படுகின்றது. அவர்கள் கம்பீரமிக்க இறைவனின் மீது சத்தியம் செய்து இது போன்ற கூட்டத்தில் ஆணை இடுகின்றார்கள். இட்டுக்கட்டிக் கூறுபவருக்கு இறைவன் பேரில் இதுபோன்று ஆணையிட தைரியம் வருமா? அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் என மவ்லவி சாஹிப் எழுதியிருந்தார்கள். (மல்.'பூஸாத் தொகுதி 1, பக்கம் 326-327; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அறிவுரை கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறினார்கள். பைஅத்தின் சந்தர்ப்பத்தின் போது சில சொற்களை கிளிகளைப் போன்று மனனம் செய்து கூறி விடுவதனால் எந்த பயனும் இல்லை. மனதை தூய்மைப்படுத்துவதற்கு உரிய அறிவை பெற்றுக் கொள்ளுங்கள். அதற்கான தேவையே எஞ்சியுள்ளது. மனத்தூய்மை என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ளுங்கள். மேலும் அதனை தன் மீது செயல்படுத்துங்கள். மஸீஹின் மரணத்தின் மீது அவருடைய வாழ்வின் மீது வீணாக சண்டையிட்டு வாதம் செய்து அழைவது என்பது ஒருபோதும் நமது நோக்கமல்ல. இது ஒரு சாதாரண விஷயமாகும். இது ஒரு தவறாகும். இந்த தவறை நாம் சீர்படுத்தி விட்டோம். ஆனால் நமது பணியும் நமது நோக்கமும் இதை விட உயர்ந்தது. அது என்னவென்றால், நீங்கள் உங்களுக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். முற்றிலும் நீங்கள் ஒரு புதிய மனிதராக மாறி விட வேண்டும். உங்களில் ஒவ்வொருவருக்கும் இதன் இரகசியத்தை புரிவதும் அவசியமாகும். நான் வேறொருவனாக இருக்கின்றேன் என்று கூறும் அளவிற்கு உங்களில் ஒவ்வொருவரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து நான் கூறுகின்றேன். நிச்சயமாக எதுவரை நீங்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை எனது தோழமையில் இருக்க மாட்டீர்களோ அதுவரை நான் புதிய நபராக மாறி விட்டேன் என்று எவரும் கருதி விடக்கூடாது. அதன் மூலம் எந்த பயனும் இல்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இயல்பு மற்றும் அறிவின் நிலை மற்றும் உணர்ச்சிகளின் நிலையில் உயர்தரமான தூய்மை கிடைக்கப் பெற வேண்டும். அவ்வாறு கிடைத்தால் நல்லது. இல்லையென்றால் எந்த பயனும் இல்லை. (மல்.'பூஸாத் தொகுதி 2, பக்கம் 72-73; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து அன்னார் கூறினார்கள். நீங்கள் நம்பிக்கையாளர்கள் என்றால் நன்றி செலுத்துங்கள். மேலும் நன்றி செலுத்தும் வகையில் சஜ்தாக்கள் செய்யுங்கள். இக்காலத்தை எதிர்நோக்கி காத்திருந்து உங்களது முன்னோர்கள் மறைந்து விட்டார்கள். எண்ணற்ற ஆன்மாக்கள் ஆர்வத்துடன் இந்த பயணத்திலேயே கடந்து சென்று விட்டன.

அன்னார் முஸ்லிம்களை அழைத்து கூறினார்கள்: உங்களுக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அது கிடைத்து விட்டது. அதற்கு நீங்கள் மதிப்பளிப்பதும் மதிப்பளிக்காமல் இருப்பதும் உங்கள் கையில் இருக்கின்றது. அதனை நான் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்துக் கொண்டு இருப்பேன். நான் படைப்பினங்களின் சீர்திருத்தத்திற்காக அனுப்பப்பட்டுள்ளேன். மார்க்கத்தை பசுமையாக உள்ளங்களில் நிலைபெறச் செய்வதற்காக நானே அனுப்பப்பட்டுள்ளேன். இந்த அறிவிப்பை செய்வதிலிருந்து நான் விலகி இருக்க முடியாது. எவ்வாறு கலீமுல்லாஹ் அனுப்பப்பட்டார்களோ அவ்வாறே நான் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே இரண்டாவது கலீமுல்லாஹ் உண்மையில் அனைவரையும் விட முதல் இடத்தில் இருப்பவர்கள் செய்யதுல் அன்பியா அவர்கள் ஆவார்கள். மற்ற ஃபிர்அவ்ன்களை அழிப்பதற்காக வந்தார்கள். அவர்களுடைய ஹக்கில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. اِنَّآ اَرْسَلْنَآ اِلَيْكُمْ رَسُوْلًا شَاهِدًا عَلَيْكُمْ كَمَآ اَرْسَلْنَآ اِلٰى فِرْعَوْنَ رَسُوْلًا இன்னா அர்ஸல்னா இலைக்கும் (ரஸூலன் ஷாஹிதன் அலைக்கும் கமா அர்ஸல்னா இலா ஃபிர்அவ்ன ரஸூலா) எவர் தனது செயல்களில் கலீமுல்லாஹ்வின் சாயலாக இருக்கின்றாரோ அவருக்கு மஸீஹ் போன்ற ஒருவருடைய வாக்குறுதி தரப்பட்டுள்ளது. (73:16) நீர் முதல் கலீமுல்லாஹ்வுக்கு ஒப்புமை பெற்றவராக இருக்கின்றீர். ஆனால், அந்தஸ்தில் அவரை விட சிறந்தவராக இருக்கின்றீர். ஒரு மஸீஹிற்கு ஒப்பானவருக்கான வாக்குறுதி தரப்பட்டுள்ளது. மேலும் மஸீஹிற்கு ஒப்பான அவர் மஸீஹ் இப்னு மர்யமின் ஆற்றலையும், இயல்பையும் சிறப்புத் தன்மையையும் பெற்று மஸீஹ் இப்னு மர்யமின் காலகட்டம் வரை அதாவது 14 –ஆம் நூற்றாண்டில் விண்ணிலிருந்து இறங்கினார். அவ்வாறு விண்ணில் இருந்து இறங்கியது ஆன்மீக அளவில் இருந்தது. ஒட்டு மொத்த மக்களின் சீர்கேட்டிற்குப் பிறகு படைப்பினங்களின் சீர்திருத்தத்திற்காக அந்த வருகை நிகழ்ந்தது. இந்த எல்லா விஷயங்களின் அடிப்படையிலும் தற்போதைய காலகட்டத்தில் அந்த மஸீஹ் தோன்றியுள்ளார். இந்த காலகட்டம் மஸீஹ் இப்னு மர்யம் இறங்குவதற்குரிய காலகட்டமாகும். அதை புரிந்து கொள்வதற்கு ஓர் அடையாளமாகும். எனவே ஒவ்வொருவரும் அதனை நிராகரிப்பதில் விரைந்து செயல்படக்கூடாது. அவ்வாறு செயல்பட்டால் அவர் இறைவனின் கோபத்திற்கு ஆளாகி விடுவார். எவர்கள் இருளான சிந்தனை மற்றும் தனது பழைய கற்பனைகளில் மூழ்கி கிடக்கின்றார்களோ அத்தகைய மக்கள் அவரை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆனால் மிக விரைவில் அவர்களின் தவறுகளை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்ற அந்த காலம் வர இருக்கின்றது. உலகில் ஓர் எச்சரிக்கையாளர் தோன்றினார். ஆனால் உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஒப்புக் கொள்வான். மிக கடுமையான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான் (.'.பத்ஹே இஸ்லாம். ரூஹானி கஸாயீன் தொகுதி 30, பக்கம் 7-9). நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஒப்புக் கொண்டுள்ளோம். இது நமது நற்பேறாகும்.

பைஅத்துடன் நம்மிடம் தூய மாறுதல்களை உருவாக்குவதற்கும் திருக்குர்ஆன் போதனைகளை நம்மிடத்தில் செயல்படுத்துவதாகவும் நாம் வாக்குறுதி செய்துள்ளோம். மேலும் நன்றிக்குரிய சஜ்தாக்களை செய்யக்கூடிய மக்களாக நாம் இருக்கின்றோம். பார்வைகளை அங்கும் இங்கும் நோட்டமிட்டு கடந்து செல்லக் கூடியவர்களாக நாம் இருக்கவில்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றிய காலத்தில் – இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலகட்டத்தில் இறைவன் நம்மை படைத்துள்ளான். இது அல்லாஹ் நம்மீது செய்துள்ள அருளும் கருணையும் ஆகும். எந்த இருளில் முன்னர் மக்கள் வீழ்ந்து கிடந்தனரோ அந்த காலகட்டம் கடந்து விட்டது. இஸ்லாத்தின் மறுமலர்ச்சிற்குரிய காலகட்டத்தில் நாம் பிறந்திருக்கின்றோம். அதனை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏராளமான நல்ல ஆன்மாக்கள் இந்த உலகத்தை விட்டு சென்று விட்டன. உயிருள்ள இறைவனுடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மை இணைத்திருக் –கின்றார்கள். எவ்வாறு அவன் இதற்கு முன்பு அந்த இறைவன் பேசியும், செவிமடுத்தும் வந்தானோ அதே போன்று இன்றும் இறைவன் பேசவும், கேட்கவும் செய்கின்றான். எனவே நாம் நன்றி செலுத்த வேண்டும்.

இவ்விடத்தில் நான் இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகின்றேன். கடந்த நாட்களில் மார்ச் 23 என்ற அடிப்படையில் சில மக்கள் ஒருவர் மற்றவருக்கு இன்றைய காலகட்டத்தின் வழிமுறைக்கு WhatsApp மூலமாக ஒருவர் மற்றவருக்கு வாழ்த்துக்கள் கூறிக் கொண்டிருந்தனர். நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஒப்புக் கொண்டிருக்கின்றோம். அன்னாரை ஏற்றுக் கொண்டு நாங்கள் நல்வழி பெற்ற முஸ்லிம்களாக மாறி விட்டோம். மேலும் நாங்கள் மார்க்கத்தின் உதவிக்காக அதன் சிறப்புகளை பரப்புவதற்காக இந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தால் அது அவர்களுக்குரிய உரிமையாகும். அதில் எந்த தவறும் இல்லை. அதில் எவ்வித பித்அத்தும் இல்லை. எனக்கு ஆச்சரியமாக உள்ளது. இந்த வாழ்த்துக்களை தெரிவிக்கக்கூடிய நபர்களுக்கு ஒருவர் கடிதம் ஒன்றை எழுதி இருக்கின்றார்.

அதில் அவ்வாறு வாழ்த்து கூறுவதை மிக கடுமையான சொற்களில் தடை செய்திருக்கின்றார். மேலும் எவ்வாறு மற்ற முஸ்லிம்கள் புதிய பித்அத்களில் வீழ்ந்து விட்டனரோ அது போன்று நீங்களும் விழுந்து விடுவீர்கள் என்று எச்சரிக்கை செய்துள்ளார். எனக்கு ஆச்சரியமாக உள்ளது. என்னைப் பொருத்தவரை அந்த நபர் மார்க்க அறிவு படைத்தவர் ஆவார். மேலும் ஜமாஅத் அமைப்பை பற்றியும் அறிந்தவர் ஆவார். நீங்கள் பித்அத்களில் வீழ்ந்து விடுவீர்கள் என்று எவ்வாறு அவர் கூற முடியும்? மற்ற முஸ்லிம்களிடத்தில் கிலாஃபத் எனும் அருட்கொடை இல்லை. ஆனால் அஹ்மதிகளிடத்தில் உள்ளது.

அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணமாக உள்ளது. ஒரு தவறான விஷயம் அல்லது ஒரு பித்அத் உருவாகுவதாக தென்பட்டால் கிலாஃபத் உண்மையாக இருக்கின்ற பட்சத்தில் அதுவே அதனை தடுத்து நிறுத்தி விடும் – இன்ஷா அல்லாஹ். அடுத்து இன்னொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். மக்களின் எண்ணங்கள் மீது தேவையின்றி சந்தேகம் கொள்ளக்கூடாது. إِنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ (இன்னமல் அஃமாலு பின்னிய்யாத்) ஒருவர் நல்ல எண்ணத்துடன் செய்திருக்கலாம். எனவே அந்த நபர் கிலாஃபத் எனும் கேடயத்திற்கு பின் நின்று தான் பேசியிருக்க வேண்டும். கிலஃபாபத்தின் பாதங்களுக்கு முன்னால் சென்று பாதங்களை வைத்து முன்னேறுவதற்கு முயலக் கூடாது. எவர் அவ்வாறு செய்தாலும் அவர் வீழ்ந்து விடுவார். இதை நினைவில் கொள்ளுங்கள். ஒற்றுமையாக இருங்கள். தனது விருப்பத்திற்குரிய விஷயத்தை ஜமாஅத் உறுப்பினர்கள் மீது திணிப்பதற்கும் அதன் படி செயல்பட வைப்பதற்கும் முயற்சி செய்யாதீர்கள். அது போன்ற மக்களுக்கு ஓர் உதாரணத்தை தருகின்றேன்.

அதனை மிகப்பெரிய தவறு என்று நம்மால் கூற முடியாது. ஆனால் முஸ்லிம்களிடம் இருக்கின்ற பித்அத்துகளில் ஒரு பித்அத்தைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு என்ன பார்வை இருந்தது என்பதும் அதிலிருந்து தெரிய வருகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு முறை ஜுமுஅத்துல் விதா சந்தர்ப்பத்தில் தொழப்படுகின்ற தொழுகைகள் மேலும் கடந்த காலங்களில் விடுப்பட்டுப் போன தொழுகைகளை அன்று தொழுவதனால் தொழுகைகள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன என்று முஸ்லிம்கள் கருதுகின்றனர். இது பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பதிலளித்தார்கள்.

அன்னார் கூறினார்கள்: இது வீணான விஷயமாகும். இது வீணான விஷயம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அத்துடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். ஒரு முறை பொருத்தமற்ற நேரத்தில் ஒருவர் தொழுது கொண்டிருந்தார். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய காலகட்டத்தில் ஒருவர் அந்த நபரை ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்று ஒருவர் கேட்டார். அதற்கு அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். أَرَءَيْتَ الَّذِي يَنْهَىٰ عَبْدًا إِذَا صَلَّىٰ (அர அய்தல்லதி யன்ஹா அப்தன் இதா ஸல்லா) தொழுது கொண்டிருக்கின்ற ஒரு அடியாரை தடுத்து நிறுத்திய ஒரு மனிதரை நீர் பார்த்திருக்கின்றீரா? (96:10,11) என்ற வசனத்தின் கீழ் நான் குற்றவாளியாக ஆகிவிடக்கூடாது என்று நான் அஞ்சுகிறேன் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஆம்! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். ஒருவர் வேண்டுமென்றே தொழுகையை இந்த இடத்தில் விட்டு விடுகின்றார். அதாவது நான் இந்த தொழுகைகளை ஜுமுஅத்துல் விதா நாளன்று தொழுது கொள்வேன் என்று விட்டு விடுகின்றார் என்றால் அது ஆகுமானதல்ல. ஆனால் வெட்கத்தின் நிலையில் அதனை அகற்றுவதற்காக தொழுகின்றார் என்றால் அவரை தொழ விடுங்கள். அவரை ஏன் தடுக்கின்றீர்கள். கடைசியில் அவர் துஆ தானே செய்கின்றார்.

அடுத்து அன்னார் கூறினார்கள். பாருங்கள். நீங்கள் தடுப்பதனால் இந்த வசனத்தின் கீழ் வந்து விடக்கூடாது என்று எச்சரிக்கை செய்தார்கள். எவருக்கு ஃபத்வா வழங்குவதற்கான உரிமை இருந்ததோ அவர் இந்த அளவிற்கு எச்சரிக்கையுடன் இருந்திருக்கிறார். ஆனால் இந்த நபரோ வாழ்த்துக் கூறுவதை எல்லை மீறிய குற்றத்திற்குரிய செயலாகக் கருதுகின்றார். மேலும் ஃபத்வா கொடுக்கின்றார். அவரது உள்ளத்தில் சில அச்சங்கள் இருந்திருக்கும் என்றால் அவர் எனக்கு அதனை எழுதியிருக்க வேண்டும். அது தடுக்கப்பட வேண்டியதாக இருந்தால் அதனுடைய பொறுப்பு காலத்தின் கலீஃபாவினுடையதாகும். அதனை ஜமாஅத் அமைப்பின் மூலமாக தடுத்து நிறுத்தி இருக்கலாம். அல்லாஹ் நம் அனைவருக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை புரிவதற்கும் அதன்படி செயல்படுவதற்கும் உரிய நற்பேற்றை நமக்கு வழங்குவானாக!

தொழுகைகளுக்குப் பிறகு நான் சில ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன். அவற்றில் இரண்டு ஹாஸிர் ஜனாஸாவாகும். ஒரு ஜனாஸா மதிப்பிற்குரிய மஹ்மூதா சாதி சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் மதிப்பிற்குரிய மர்ஹூம் முஸ்லிஹுத்தீன் சாதி சாஹிப் அவர்களுடைய துணைவியார் ஆவார்கள். மார்ச் 22 ஆம் தேதி தனது 94 வது வயதில் அன்னார் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூம் முஸ்லிஹுத்தீன் சாதி சாஹிப் அவர்கள் மதிப்பிற்குரிய அப்துர் ரஹ்மான் தர்த் அவர்களுடைய சகோதரர் ஆவார்கள். அவர்கள் ஃபஸ்ல் பள்ளிவாசலின் இமாமாக இருந்துள்ளார்கள். பெரிய பல பணிகளை செய்திருக்கிறார்கள். இங்கு 1965 ஆம் ஆண்டு அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. அன்னாரின் துணைவியார் அவர்கள் 41 ஆண்டு கால விதவை காலத்தை மிகப்பொறுமையுடனும் நன்றியுடனும் கழித்துள்ளார்கள். அன்னாரின் ஒரு மகன் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலகட்டத்தில் அன்னாரின் தனிச் செயலராக தொண்டாற்றி இருக்கின்றார்கள். அன்னாரும் அன்னாரின் மகளும் வஃபாத்தாகி விட்டார்கள். ஒரு மகன் இருக்கின்றார். அவர்களுடைய பெயர் ஜலாலுத்தீன் அக்பர் ஆகும். அவர் துணை விருந்தினர் செயலராக தொண்டாற்றி உள்ளார்கள். மர்ஹூமாவிற்கு கிலாஃபத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. தப்லீக் செய்வதுடன் திருக்குர்ஆனை ஓதுவதிலும் ஓதிக் கொடுப்பதிலும் ஆர்வம் உடையவர்களாக இருந்தார்கள். துஆ செய்யக் கூடியவராகவும், பொறுமை செய்யக் கூடியவராகவும், நன்றி செலுத்தக் கூடியவராகவும் இருந்தார்கள். கடந்த 6 ஆண்டு காலமாக மிகவும் நோயுற்று இருந்தார்கள். நோயின் காலகட்டத்தை மிகவும் பொறுமையுடனும், நன்றியுடனும் கழித்தார்கள். வஸிய்யத் செய்திருந்தார்கள். அல்லாஹ் அன்னாரது பதவிகளை உயர்த்துவானாக! அவர்களின் சந்ததிகளை எப்போதும் நன்றியுணர்வுடனும் பற்றுடனும் அஹ்மதிய்யத்தில் நிலைநாட்டுவானாக!

இரண்டாவது ஜனாஸா நூருத்தீன் சராக் சாஹிப் அவர்களுடையதாகும். நூருத்தீன் சராக் சாஹிப் அவர்கள் மர்ஹூம் சராக் தீன் சாஹிப் காதியான் அவர்களுடைய மகனாவார்கள். மார்ச் மாதம் 15 ஆம் தேதி தனது 45 வது வயதில் அன்னாருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அவர்களுக்கு காதியானோடு தொடர்பிருந்தது. 10 ஆண்டுகளுக்கு அதிகமாக யூ.கே –வில் வசித்து வந்தார்கள். மிகவும் எளிமையான இயல்பை உடையவராக இருந்தார்கள். அவருடைய சகோதரி எழுதுகின்றார். குழந்தைப் பருவம் முதல் அவர்கள் ஏழ்மையை பார்த்து வந்துள்ளார்கள். எனவே எப்போது அவர்களுக்கு நல்ல வசதி வாய்ப்பை வழங்கினானோ அவர்களிடத்தில் பேராசை உருவாகவில்லை. மாறாக, ஏராளமான மக்களுக்கு பொருள் உதவி செய்து வந்தார்கள். அன்னாரின் ஒரு நாட்குறிப்பு கிடைத்துள்ளது. அதில் 47 நபர்களின் பெயர் இடம் பெற்றுள்ளது. அவர்களுக்கு அன்னார் தொடர்ந்து அன்னார் பொருளுதவி செய்து வந்துள்ளார்கள். அஹ்மதி அல்லாத ஒருவர் கூட அன்னாரை புகழ்ந்து கூறியுள்ளார். உண்மையான மனிதர், மலக்கு இயல்பு கொண்டவர், தொழுகையை பேணக் கூடியவர், கிலாஃபத்தோடு எல்லையற்ற தொடர்பு கொண்டவர், ஜமாஅத்தின் சான்றோர்களை கண்ணியப்படுத்தக் கூடியவர். அன்னாரின் தாயார் மற்றும் இதர குடும்பத்தினர் காதியானில் உள்ளார்கள். அல்லாஹ் அவர்களின் அந்தஸ்த்தை உயர்த்துவானாக. உறவினர்களுக்கு பொறுமையையும் ஆறுதலையும் வழங்குவானாக. குறிப்பான அன்னாரின் தாயாருக்கு அல்லாஹ் அமைதியை வழங்குவானாக.

ஒரு காயிப் ஜனாஸா உள்ளது. அது ஸய்யதா முபாரக்கா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் அப்துல் பாரி சாஹிப் அவர்களுடைய துணைவியார் ஆவார்கள். மார்ச் மாதம் 20 ஆம் தேதி 83 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

கொஞ்ச காலமாகவே நோயுற்று இருந்தார்கள். அவர்கள் பீஹாரில் பிறந்தார்கள். அன்னாருடைய தந்தையார் செய்யது மூஸா ரஸா பாகல்பூரை சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது காலகட்டத்தில் அன்னாருடைய தந்தையார் 15 வது வயதில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார். பின்னர் அன்னாருடைய திருமணம் அப்துல் பாரி சாஹிப் அவர்களோடு நடந்தது. கிழக்கு பாகிஸ்தானுக்கு சென்று அவர்கள் குடியேறினார்கள். இந்திய பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அவர்கள் அங்கு சென்று விட்டார்கள். இந்த மக்களும் அப்துல் பாரி சாஹிப் அவர்களும் 1942 ஆம் ஆண்டு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது காலகட்டத்தில் பைஅத் செய்தார்கள். இந்த மக்கள் பங்களாதேஷ் உருவான பிறகு ரப்வாவில் குடியேறினார்கள். 20 ஆண்டு காலத்தை விட அதிகமாக பாரி சாஹிப் மற்றும் அவர்களுடைய கணவர் ஃபஸ்லே உமர் ஹோமியோபதி டிஸ்பென்ஸரியில் பணியாற்றினார்கள். வக்ஃபே ஜதீதிற்கு கீழ் செயல்பட்டு வருகின்றது. இங்கு அன்னாருடைய மகன் அப்துல் காலிக் சாஹிப் பங்காலி அவர்களும் இருக்கின்றார்கள். அவர் தனது வட்டத்தில் பலரும் அறிந்த நபர் ஆவார். ஜமாஅத்தில் நிறைய தொண்டாற்றி இருக்கின்றார். அப்துல் பாரி சாஹிப் அவர்கள் குழந்தைகளுக்கு உருது கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக மனைவியுடன் அனைரையும் ரப்வாவிற்கு அனுப்பி வைத்து விட்டார்கள். அந்த தருணத்தில் கிழக்கு பாகிஸ்தானில் மிக வசதியான வாழ்க்கையையே அவர்கள் கழித்து வந்தார்கள். வேலைக்காரர்களெல்லாம் இருந்தார்கள். ஆனால் குழந்தைகளின் தர்பிய்யத்திற்காக அவர்கள் ரப்வாவிற்கு சென்று விட்டார்கள். பின்னர் உருது படிக்க வேண்டும் என்பதற்காக அங்கேயே தங்கி விட்டார்கள். ஜமாஅத்தைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், கிலாஃபத்திற்கு மிக அருகில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அங்கேயே தங்கி விட்டார்கள். அந்த வகையில் அவர்கள் பெரிய தியாகம் செய்துள்ளார்கள். அல்லாஹ் அவர்களது தகுதியை உயர்த்துவானாக. மேலும் அவர்களது பிள்ளைகளுக்கு அவர்களின் நோக்கங்களை முழுமை செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக!

நான் கூறியது போன்று இந்த மூன்று ஜனாஸாக்களை தொழுகைக்குப் பிறகு நான் தொழ வைப்பேன் – இன்ஷா அல்லாஹ்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர் வாரப் பத்திரிகை காதியான்

Vol. 1 Thursday 28 APRIL 2016 Issue No. 8

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# கிலாஃபத்தின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம்

## மதிப்பிற்குரிய மவ்லானா குலாம் நபி சாஹிப் நியாஸ், காஷ்மீர் மாநிலப் பொறுப்புப் பிரச்சாரகர்

எல்லாவற்றின் மீதும் வல்லமையுள்ள எஜமானனாகிய இறைவன் இந்தப் பிரபஞ்சத்தை வீணாகப் படைக்கவில்லை. மனிதனை அவன் உருவாக்கியதற்கான மகத்தான காரணத்தை நாம் பார்க்க முடிகின்றது. அது அவனை அடையாளங்கண்டு கொள்வதாகும்.

كُنْتُ كَنْزًا مَخْفِيًّا فَاَحْبَبْتُ اَنْ اُعْرَفَ فَخَلَقْتُ آدَمَ

நான் ஒரு மறைவான கருவூலமாக இருந்தேன். நான் அடையாளங்கண்டு கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினேன். எனவே, நான் ஆதமைப் படைத்தேன் என்பது ஹதீஸே குத்ஸியாகும். படைத்த இறைவனை அறிந்து கொள்வதற்கான ஒரு வழியாக ஆதம் ஆக்கப்பட்டார். மறைவிலும் மறைவாக இருக்கின்ற, எல்லாப் புகழுக்கும், அழகிற்கும், உயர்ந்த நற்பண்புகளுக்கும் உறைவிடமாகத் திகழ்கின்ற இறைவனின் தோற்றம் ஆதம் மூலமாக வெளிப்பட்டது. இதைப் பற்றி திருக்குர்ஆனில் அல்லாஹ் மலக்குகளை நோக்கி இவ்வாறு கூறுகின்றான்: اِنِّي جَاعِلٌ فِي الْاَرْضِ خَلِيْفَةً

நான் பூமியில் ஒரு கலீஃபாவை உருவாக்க போகின்றேன் *(2:31)*

அப்போது, மலக்குகள் தங்களது எல்லைக்குட்பட்ட அறிவின் காரணமாக இதனால் நேரவிருக்கின்ற அபாயங்களைப் பற்றி கூறினர். அல்லாஹ் இந்த அபாயங்கள் பற்றி மிகவும் நுட்பமான முறையில் மறுத்து விட்டான். மேலும், ஆதம் படைக்கப்படுவதற்கான நோக்கத்தை எடுத்துக் கூறினான். அவர்கள் அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைத்தவாறு அவன் கூறிய உண்மையை ஏற்றுக் கொண்டனர். சுருக்கமாக, அல்லாஹ் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்திருப்பதும், அதில் தனது கலீஃபாவை நியமித்திருப்பதும் கிலாஃபத்தின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துகின்றது.

### கிலாஃபத் என்பதன் பொருள்:

கலீஃபா என்பதன் பொருள் பிரதிநிதியாகும். கிலாஃபத் என்பதன் பொருள் பிரதிநிதித்துவம் ஆகும். அல்லாமா இப்னு கஸீர் அவர்கள் 'சென்ற ஒருவரின் இடத்தில் நின்றவாறு அவர் சென்றதன் காரணமாக ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை நிரப்புபவர் கலீஃபா ஆவார்' என்று கூறியுள்ளார்கள். அகராதியின் அடிப்படையில் கிலாஃபத் என்பதற்கு 'ஒருவரது பிரதிநிதியாக இருப்பது' என்றே பொருள். மரபுக்கேற்ப இந்த சொல் நபியின் பிரதிநிதியாக இருப்பவருக்கே கூறப்படுகின்றது. (அந்நிஹாயா தொகுதி 1 பக்கம் 315)

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

கலீஃபா என்பதன் பொருள் பிரதிநிதியாகும். அவர் மார்க்கத்தைப் புதுப்பிக்கக்கூடியவராக இருக்கின்றார். நபிமார்களின் காலத்திற்குப் பிறகு இருள் பரவுகின்ற போது அதை அகற்றுவதற்காக அவர்கள் இருந்த இடத்திற்கு வருபவர்களை கலீஃபா என்று கூறுகின்றனர். *(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 382)*

### ஹுஸூர் (அலை) அவர்கள் கிலாஃபத்தின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்து கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

மனிதன் நிரந்தரமாக வாழ முடியாது என்பதால் உலகில் எல்லாரையும் விட கண்ணியமிக்கவர்களாகவும், சிறந்தவர்களாகவும் இருக்கின்ற தூதர்கள் நிழலான முறையில் எப்போதும் கியாமத் வரை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று இறைவன் நாடியுள்ளான். இந்த நோக்கத்திற்காகவே அல்லாஹ் கிலாஃபத்தை ஏற்படுத்தியுள்ளான். அதன் மூலம் உலகம் ஒருபோதும் எந்தக் காலத்திலும் தூதுத்துவத்தின் அருள்களிலிருந்து விலகி இருக்காது.

(ஷஹாதத்துல் குர்ஆன் பக்கம் 58)

### நபிமார்கள் அனைவரும் அல்லாஹ்வின் கலீஃபாக்கள் ஆவர்:

ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் வரை எத்தனை நபிமார்கள் வந்தனரோ அவர்கள் அனைவருமே அல்லாஹ்வின் கலீஃபாக்கள் ஆவர். இவர்கள் அனைவருமே இஸ்லாமிய மார்க்கத்தின் போதனையையே வழங்கினர். வித்தியாசம் என்னவென்றால் கடந்த காலங்களில் வந்த நபிமார்கள் குறிப்பிட்ட ஒரு காலத்திற்காகவும், குறிப்பிட்ட ஒரு சமுதாயத்திற்காகவும் வந்தவர்கள் ஆவர். எனவே, காலத்தின் எதிர்பார்ப்பிற்கேற்ப அவர்களது போதனை இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு மனித இனத்திற்கும் தூதராக வந்திருக்கின்றார்கள்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் قُلْ يٰاَيُّهَا النَّاسُ اِنِّي رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا அதாவது கூறுவீராக! மக்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன். *(7:109)* இந்த பூமியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனின் ஒளிகளின் முழுமையான முன்மாதிரியாகும். அவர்கள் முழுமையான செயல்திட்டமாகவும் வாழ்க்கை நெறிமுறை -களையும் கொண்டு வந்தார்கள். அவர்கள் மூலமாக அல்லாஹ் மார்க்கத்தை முழுமை படுத்தியுள்ளான். அதை பற்றி அவன் اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன் *(5:4)* என்று கூறியுள்ளான். (தொடரும்)

---

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் - முன்னவர் பின்னவர் அனைவரையும் விட சிறப்பினை வழங்கினான். மேலும் அவரது ஆசைகளை அவரது வாழ்நாளிலயே நிறைவேற்றித் தந்தான். ஒவ்வோர் அருளின் தலையூற்று அவரே ஆவார். எந்த நபர் அவரிடமிருந்து அருள்களைப் பெறுவதை ஏற்றுக் கொள்ளாமல் தன்னிடம் ஏதாவதொரு சிறப்பு இருப்பதாக வாதம் செய்கின்றாரோ அவர் மனிதர் அல்லர். மாறாக, அவர் ஷய்த்தானின் சந்ததியாவார். ஏனென்றால், ஒவ்வொரு சிறப்பின் திறவுகோலும் அவருக்கு தரப்பட்டிருக்கின்றது. மேலும் ஒவ்வோர் இறை ஞானத்தின் கருவூலமும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எவர், அவர் மூலமாக எதையும் பெறவில்லையோ அவர் தொன்றுதொட்டே புறக்கணிக்கப்பட்டவர் ஆவார். நாம் எம்மாத்திரம்? நமது உண்மை என்ன? இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் நாம் அருளை மறுத்தவராக ஆகி இருப்போம். அதாவது, உண்மையான ஏகத்துவத்தை நாம் அந்த நபியின் மூலமாக பெற்றோம். மேலும் உயிருள்ள இறைவனை நாம் அந்த முழுமை பெற்ற நபியின் மூலமாகவும் அவரது ஒளியின் மூலமாகவும் அடையாளங்கண்டு கொண்டோம். மேலும் இறைவனுடன் உரையாடுகின்ற நற்பேறும் கூட இந்த மேன்மைமிக்க நபியின் மூலமாகவே நமக்கு கிடைத்தது. அதன் மூலமாகவே நாம் அவனது முகத்தைப் பார்க்க முடிகின்றது. அந்த நேர்வழி என்ற சூரியனின் கதிர்கள் வெயிலைப் போன்று நம்மீது படிகின்றது. நாம் அதற்கு எதிரில் நிற்கும் அந்த நேரம் வரை நாம் ஒளிமிக்கவர்களாக இருக்க முடியும்.

*(ஹகீத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117-119)*

### சகோதரர்களின் கவனத்திற்கு...

அல்லாஹ்வின் மாபெரும் அருளால் பத்ர் பத்திரிகையின் தமிழ் வெளியீடு தங்களை வந்தடைந்து கொண்டிருக்கும் என்று நம்புகிறோம். தமிழ் பத்ர் பத்திரிகை இதுவரை கிடைக்காத சகோதரர்கள் அல்லது தங்களது முகவரியில் மாற்றம் இருப்பின் கீழ்க்கண்ட கைபேசி எண்களை தொடர்பு கொள்ளுங்கள்.

*மவ்லவி M. ரஃபீக் அஹ்மது* **- 9944803650**
*மவ்லவி A. கலீல் அஹ்மது* **- 9952712731**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad